170

# தோத்திரக் கீர்த்தனப்பாமாலை

## முதற்பாகம்

இதில்
வண்ணம், திருப்புகழ், பதம்,
கிருத்தியம், இந்துஸ்தானி
வகையரு நோட், சிந்து,
காவடிச்சிந்து முதலியபல
வர்னமெட்டுகளாலான
பாடல்களும், வெண்டா
கலித்துறை (யமகப்,
நிரோஷ்டகயமகப்)
ஆசிரியவிருத்த
முதலியவைக
ளும் அடங்கி
யிருக்கின்
றன.

# THOTHIRAKEERTHANAPPAMALAI 1ST. PART.

BY
K. PAKKIRIA PILLAI
OF
PALNI
THE AUTHOR OF
"KALYANAVASAGA KAMALA SOUNDRAM"
A VERY INTERESTING DETECTIVE
TAMIL NOVEL.

1919.

...IA PRESS, MADURA-19.

O2:417
M19

# முகவுரை.

தோத்திரக்கீர்த்தனப்பாமாலை யென்னும் இந்தப்புஸ்தகத்துக்கும் ஓர் முகவுரையா? என்று ஆக்கியோன் கூறுகின்றார்; ஆனால் "தோன்றாதோற்றித்துறைபலமுடிக்கினுந்தான்றற்புகழ்தறகுதியன்றே" என்பதையன்னார்பாராட்டுந்தன்மையுடையாராதல்பற்றி "ஆயிரமுகத்தானகன்றதாயினும்பாயிரமல்லதுபனுவலன்றே" என்பதற்கிணங்க இச்சிறிய முகவுரையேனுமெழுத முன் வந்தேன் அன்னார் முன்னொருகால் பழனியில் ஸ்ரீ தண்டபாணிக்கடவுள் சந்நிதியில் அவனருளாலே அவன் றாள் வணங்கி அசரீரி, யடி பெடுத்துக் கொடுக்கப் பரவசங்கொண்டு பாமாரிபொழிந்த பக்த சிகாமணியாதலால் அவராலியற்றப்பெற்ற இப்புத்தகத்திலுள்ள தோத்திரக்கீர்த்தனைகளை இந்தியத்தமிழ்மாந்தரனைவரும் ஆதரிப்பார்களென்பதே என்னுடைய அபிப்பிராயம்.

**M. S. S. வேலுச்சாமி,**

மதுரை.

உ

கணபதி துணை

# தோத்திரக் கீர்த்தனப்பாமாலை.

## முதற்பாகம்

---

இஃது

சிவ, சத்தி, ராம, குகநாமசங்கீதகோஷ்டிகளுக்கும்
பொதுஅன்பர்களுக்கும், சங்கீதப்பிரியநண்பர்களுக்கும்
பயன்றரத்தக்கதாக

பழனி

**K. பக்கிரியாபிள்ளையவர்களால்**

இயற்றப்பெற்று

பழனி

சொக்கலிங்க முதலியார் அவர்கள் குமாரர்

**M. S. S. வேலுச்சாமி முதலியார் அவர்களால்**

மதுரை

ஷம்ஸியா அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

---

முதலாம்பதிப்பு

இதன் விலை] (Copyright Registered.) [அணா 9

---

# சூசீபத்திரம்.


| வரிசையிலக்கம் | பாட்டின் தலைப்பெயர் | பாட்டிலக்கம் |
|---|---|---|
| 1 | அம்மநீகடாக்ஷி | 22 |
| 2 | அரிகோபிகாஸ்ரீ | 27 |
| 3 | அருள்கருணைநறை | 13 |
| 4 | அருள்புரிவாய்லம்போதரா | 4 |
| 5 | ஆடிகிட்டமானதடா | 16 |
| 6 | ஆடியபூம்பதமே. | 15 |
| 7 | ஆதரர்கவதூதா | 25 |
| 8 | ஆதரித்தாள்வாயே | 19 |
| 9 | ஆதாரம்வேறேதையா | 41 |
| 10 | இன்னந்தூக்கமோபள்ளி | 28 |
| 11 | உமிழுமெச்சிலினே | 40 |
| 12 | உனக்கிதுமரியாதையா | 43 |
| 13 | உன்பாதந்தேடும்பேரன்போர் | 14 |
| 14 | எந்நேரமுமடிமை | 30 |
| 15 | எந்தனுக்கிரங்கிவரம் | 29 |
| 16 | ஓமுருகாகம்ஆன்திபிகாக் | 52 |
| 17 | கதிர்வடிவேலா நீ என்முன்னே | 50 |
| 18 | கந்தநாமமோது | 34 |
| 19 | கந்தாஇதென்னசிங்காரமா | 51 |
| 20 | கற்றவுலகிர்பாச்சி | 2 |
| 21 | காத்தாள்கந்தர்குகா | 46 |
| 22 | குரங்குருபம்பிறவியிநேரினும் | 38 |
| 23 | கெதிவேறெனக்கினியார் | 23 |
| 24 | சம்போசங்கரசுந்தரேசா | 12 |
| 25 | சரணாரவிந்தம் தஞ்சம் | 7 |
| 26 | ஸ்ரீமீனவிலோசனேஸ்பரி | 18 |
| 27 | சுந்தரப்பேரம்பை | 10 |
| 28 | செந்தில்வடிவேல் முருகையா | 48 |
| 29 | சேவஞ்சுமந்தபுவி | 32 |

| | | |
|---|---|---|
| 30 | கந்தசாமி கந்தசாமி | 49 |
| 31 | தாயே மதுரைமீனாக்ஷி | 21 |
| 32 | திருப்பரங்கிரி | 47 |
| 33 | திருமாலயனிந்திரனாதியர் | 45 |
| 34 | திருவாவினன்குடிகொண்ட | 31 |
| 35 | தினகரனைச்சந்திரனை | 33 |
| 36 | தேவேந்திரன்பழியும் | 9 |
| 37 | நாயனார்க்குநானடியேன் | 8 |
| 38 | நீயே நேரில்வந்தருள்வாயே | 20 |
| 39 | பூத்ததாமரைநேர்காலா | 42 |
| 40 | பூரணிபுரந்தரி | 17 |
| 41 | பொன்காப்பு மோதிரமும் | 1 |
| 42 | பொன்பெறுவமின்பெறுவம் | 3 |
| 43 | மங்களமே | 53 |
| 44 | மதுரத்தமிழ்விரிந்த | 11 |
| 45 | மனமேஜெகவாழ்வொரு | 35 |
| 46 | ராமபஜனாமிர்தாந்தம் | 26 |
| 47 | வாராய்மரகதமயூரா | 37 |
| 48 | வாராயென்னேராயுதாரா | 36 |
| 49 | வாவாவாமயில்வாகனக்கடவுளே | 44 |
| 50 | விழியாலெதிர்த்துவருவோரை | 39 |
| 51 | வெண்டாமரைத்தவிசில் | 5 |
| 52 | வெண்டாமரைத்தாயே | 6 |
| 53 | வெற்புப்பொற்சுகையணியே | 24 |


1225
784:0955

உ

கணபதிதுணை.



# தோத்திரக் கீர்த்தனப்பாமாலை

காப்பு

நேரிசை வெண்பா.

(1) பொன்காப்பு மோதிரமும் பூண்டறியா வென்கவிதைக்
குன்காப்புமில்லை யெனிலுய்வுண்டோ—முன்காப்பு
மூலமுதலேஞான மூர்த்தியே கீர்த்தனமிக்
காலமுதலேயிருந்துகா

அவையடக்கம்

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

(2) கற்றவுலகீர்பாச்சி சோச்சியெனுஞ் சொற்களிலக்
கணத்துமோது
மற்றவிலக்கியத்து மிலையானுஞ்சிறுபாலர்
மழலைச்செவ்வா

8 AUG 19
MADRAS

யுற்றதெனிலானந்தமடைகுவீரது போலென்
னுடைய வாய்ச்சொற்
குற்றமுழுதுங் குணமாய்க்கொள்ளுவதும் பெருமையினைக்
குறிக்குமாதோ

## முக்குருணிப்பிள்ளையார் வணக்கம்.

### நேரிசை வெண்பா

(3) பொன்பெறுவ மின்பெருவம்பூப் பெறுவம் புத்திரரை
முன் பெறுவம் வாக்குச்சமும் பெறுவம்—பண்பெறுவம்
ஆலவாய் மூக்குருணி யைங்கரவிநாயகன் பூங்
காலவாவிற்பணிவுங்கால்

### கீர்த்தனை இராகம் கலியாணி தாளம் ஆதி

#### பல்லவி

(4) அருள்புரிவாய் லம்போதரா—அடி பணிந்தேன்
ஆனைமுகவின்பாதரா (அருள்)

#### அனுபல்லவி

தெருள் மதுரைக்கோவிலில்—தெற்குநோக்கியமூலப்
பொருளெனுமுக்குருணிப்—புண்யமூர்த்தியேசால (அருள்)

#### சரணம்

விக்கினமெல்லாம் விலக்கி—வினைமுடியும்
விதமனுக்ரகம்துலக்கி
கொக்கினஞ்சேர்வைகாவூர்க்—குளஞ்சூழ்பழனிவாழும்
பக்கிரிதாசன்பாடல் பாடுவோர்க்கெந்நாளும் (அருள்)

## சரஸ்வதி வணக்கம்

### நேரிசை வெண்பா

(5) வெண்டாமரைத்தவிசில் வீற்றிருக்கும் வித்தகியே
பண்டாமறைக்கிழவன் பத்தினியே—ஒண்டாமத்
தோத்திரக்கீர்த்தனப்பா சொல்பாக்கு நல்வாக்கு
நாத்திரமெனக்கருளிந்நாள்

கீர்த்தனை இராகம் செஞ்சுருட்டி தாளம் ஏகம்

மாரேதும் பெருவாலே என்ற இந்துஸ்தானி வர்ன மெட்டு

பல்லவி

(6) வெண்டாமரைத்தாயே வித்தையருள்வாய்நீயே (வெ)
வித்தையருள்வாய் புத்தியருள்வாய் சித்தியருள்வாய்நீயே (வெ)

அனுபல்லவி

பண்டாமறைப்பிரமன்—பத்தினியே பாமரன்பால்
உண்டானகோபமென்ன-வொன்றுமறியேனுனன்பால் (வெ)

கற்றதுகைம்மண்ணளவே—கல்லாதுலகளவே
உற்றதெனவோதுலகி—லோதுவதெளிதலவே (வெ)

திருவாவினன்குடியாஞ்—சேய்நகரிலேயிருக்கும்
தருநாடகப்பக்கிரி—தாசன்கவிமாசறுக்கும் (வெ)

பரமகுருவணக்கம்

கீர்த்தனை தரகாரிலேலோ என்ற இந்துஸ்தானி கோஹர்ஜான் வர்ன மெட்டு

பல்லவி

(7) சரணாரவிந்தம்—தஞ்சப் கொஞ்சம்
தயைசெய்யுன்பொன்செஞ் (சர)

அனுபல்லவி

தாணியிலேதிருமானிடவடிவு—சமைந்தவகாரவுகாரா
முராணுமெனதுதிரிகரணநிலையுற-மொழிந்தாளுஞ்சர்வாதாரா (சர)

பந்தநெடும்பிணியாலுளநொந்து—படுந்துயர்கண்டனையானின்
வந்துவிவேகமருந்துதரும்பெரு—மானேஎன்கோமானேநின் (சர)

கொங்குவைகாவூராம்பழனிநகரிற்—கூடியசிறுபக்கிரிதா
சன்கவிபாடுநலன்பர்தமக்குயர்—சாமீபமொன்சீர்நெறிகா (சர)

## அறுபத்து மூன்று நாயன்மார்வணக்கம்

(8) கீர்த்தனை இராகம் தோடி தாளம் ஆதி

எங்கேநான் கண்டுதேடுவேன் என்ற சிவசாமி அரிச்சந்திர நாடக வர்ன மெட்டு

### பல்லவி

நாயனார்க்கு நானடியேன்—முத்திநாடுமறு
பத்துமூன்று (நாய)

### அனுபல்லவி

நேயர், சுந்தரமூர்த்தி, நீலகண்ட, மேனாதி,
வாயிலா, ரியற்பகை, மானக்கஞ்சார, ராதி (நாய)

மெய்ப்பொரு, ளமர்நீதி, விறன்மிண்ட, ரதிபத்தர்,
அப்பூதி, நீலநக்கர், ஆனாய, ரெறிபத்த, (நாய)

குறிப்புத்தொண்ட, ரிளையான் குடி மாறர், கழற்சிங்கர்,
சிறப்புலி, கோட்புலி, செருத்துணை, சிறுத்தொண்ட (நாய)

கண்ணப்பர்குங்கிலியக், கலயர், கோச்செங்கட்சோழர்,
பண்ணப்பர், உருத்திர, பசுபதி, புகழ்ச்சோழ (நாய)

தண்டியடிகள், ஞான, சம்பந்தர், புகழ்த்துணை,
சண்டேசுரர், முருகர், சாக்கியர், கலிக்கம்ப (நாய)

கணம்புல்ல, ரிசைஞானி, கழற்றறிவார், சத்தி,
கணநாதர், பூசலார், காரி, சோமாசிமாற (நாய)

கலிய, ரேயர்கோன்கலிக், காம, ரரியமூர்க்கர்,
குலச்சிறை, யையடிகள், கூற்றுவ, ரிடங்கழி (நாய)

மூலர், காரைக்காலம்மை, மூர்த்தி முனையடுவார்,
நீலகண்டயாழ்ப்பாணர், நின்றசீர்நெடுமாற (நாய)

மங்கையர்க்கர, சரி, வாட்டாய, ரொடுகர,
சிங்கமுனையரையர், திகழ்திருநாளைப்போவார் (நாய)

பழனிப்பக்கிரிதாசன்—பரவுஞ்சடையர், பெரு
மிழலைக்குரும்பர், பணி, மிகுநமிநந்தியடி (நாய)

ஸ்ரீமீனாக்ஷிசுந்தரேஸ்பரருடைய அறுபத்து நான்கு திருவிளையாடற்
சிறப்பும் வணக்கமும்

(9) இருபத்தேண் சீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

தேவேந்திரன்பழியும் வெள்ளானைசாபமுந்
தீர்த்துநகரம்புதுக்கிச்
செம்மல்மலையத்துவச புத்திரிதடாதகைச்
செல்வியைமணந்து வெள்ளித்
திருவம்பலத்தாடி யனுகு குண்டோதரச்
சிவகணற்கன்னமிட்டுச்
செறியனக்குழிவைகை யேழுகடலோடுமுன்
சென்றமலையத்துவசனும்
பூவேந்திவர வழைத்துக்ரபாண்டியப்பெயர்கொள்
புத்திரனையீன்றுவளைவேல்
பூச்செண்டுதந்து கடல்சுவறவேல்விட்டுவளை
புரந்தரன்மேலெறிந்து
பொன்மேருவைச் செண்டினாலடித்தருமறைப்
பொருளருளிமணிவிற்றுவான்
பொழிகடல் சுவற்றிநான் மாடமுறுகூடலாய்ப்
புரிந்தெலாம்வல்லசித்தாய்
மாவேந்தர்கைக்கரும்பைக்கலானைக்கூட்டி
மாவெய்து கௌரிமகவாய்
பாறியாடிப்பெரிய பழியஞ்சியந்தணன்
மாபாதகந்தவிர்த்து
வாள்வீசிநாகமாவெய்து மெய்க்காட்டியுல
வாக்கிழியளித்துவளையல்
மாட்டிநாலிரு சித்தியோதியச்சிட்டு நீர்
வார்த்திரசவாதியாகிச்
சாவேந்தியாரிமடு வீழவைத்துக்கோட்டை
தந்துதனபதியுமாகித்
தானுலகு காட்டிவிறகுக்கட்டுவிற்றோலை
தனையீந்துபலகையிட்டுத்

தமிழினிசைவாதுமிகவென்று பன்றிக்குமுலை
சாய்த்தளித்தமைச் சராக்கித்
தாழ்ந்தகுருவிக்கோதி நாரைக்குநிலைமுத்தி
தருமாலவாய்த்தெய்வமே

ஷை தொடர்ச்சி.

(10) சுந்தரப்பேரம்பையே வியம்புலவரிற்
றேன்றியொரு முழவடிவமாந்
தூயசங்கப்பலகைதந்து தருமிக்கழகு
தோய்ந்தபொற் கிழியளித்துத்
துணிந்துநின்கவிப்பொருட் குற்றமெனவாதித்த
சொற்கீரனைக்கரையிலே
சுகமாகவேற்றி முதநூலிலக்கணமகிமை
சொல்லிவைக்கச்செய்து பின்
ஐந்துவயதூமையைக்கொண்டு சங்கக்கலக
மதுதணித்திடைக்காடர்பால்
அன்புவைத்தவர் பிணக்கினைமாற்றிவலைவீசி
யரியநந்திருவாதவூ
ரடிகளுக்காசிரியராகியுபதேசித்து
மவரையாட்கொள்ளுநினைவாய்
அன்றுநரிபரியாகவருளியது பழயநரி
யாகவேமாறவிட்டும்
வந்தியெனுமோர்கிழவி தந்த பிட்டுண்டுமண்
வாரிச்சுமந்து வழுதி
மன்னனுக்குற்ற சுரநோய்தீர்த்து வெஞ்சமண
வாதரைச்சம்பந்தரால்
வன்கழுவிலேற்றி யுயர்வானசைவப்பட்ட
வணிகனிளையாள்துதிக்கு
மகிழ்ந்து வன்னியுங்கிணறு முரியசிவலிங்கமும்
வரவழைத்துதவுசாக்ஷி
தந்துதிருவிளையாட லறுபத்துநான்குடன்
தக்கபலவாடல்புரியுந்
தருமபரிபாலனத்தந்தையே பழனிவாழ்
தனையகுரும்பக்கிரிப்பேர்த்

தாசனவில் தோத்திரக் கீர்த்தனங்கொண்டுனருள்
சாதிக்கவேண்டுகின்றேன்
தகையுலவுமெங்கள் மீனாக்ஷிசுந்தர மூர்த்தி
தருமாலவாய்த்தெய்வமே.

ஸ்ரீமீனாக்ஷி சுந்தரேஸ்பரதோத்திரம்

(11) திருவுற்றிலகுகங்கைஎன்ற அண்ணாமலைரெட்டியார்காவடிச்சிந்து வர்னமெட்டு

சந்தக்குழிப்பு

தனனத்தனனதந்த—தனனத்தனனதந்த
தனனத்தனனதந்த—தானன—தன
தனனத்தனனதந்த—தானன—தன
தானதானன தானதானன தானதானன தானதானன
தனனத்தனனதந்ததானன—தன
தனனத்தனனதந்ததானன

கண்ணிகள்

மதுரத்தமிழ்விரிந்த—முதுமைப்புலவர்சங்க
மகிமைப்பலகைதங்கு—மாமது—ரையில்
மதிபெற்றினிதிருந்த—ஸ்ரீமது—திரு
வாதவூரடி, யாரையாதர வாகவேயருள் சோமசேகரன்
வரிசைத்துதிவிளம்பு—வோமது—மிக
வுருகித்திடுகலும்பர்—தேமது (மது)

பொதுவிற்றனிநடஞ்செய்—முதன்மெய்க்கடவுளெந்தை
புகலற்கரியசுந்த—ரேசனை—மலை
மகளைத்தழுவுகின்ற—நேசனை—பல
பூசுராதியர் பேசுமாமறை வாசகாதிக ளேசதாநிறை
புனிதச்சனிதிமந்த—காசனை—யரு
களுகிப்புரிவநின்று—பாசனை (மது)

நடைகற்றபரியென்று—வழுதிக்குறுதிதந்து
நரிவிற்றசிவசம்பு—நாதனை—சிறு
பறவைக்குமருள்கின்ற—போதனை—தொழ
ஞானவாரிதி, யேகமோகரு, ணாகரா அர, வோநமோவென

நவில்பக்கிரிபுனைந்த—பாதனைநவி
லுவமற்றிடுமொழிந்து—வாதனை (மதி)

ஷ வேறு இராகம் சஹானா தாளம் ஆதி

(12) அப்பாபழனிமலைவேலா என்ற வர்ன மெட்டு.

சம்போ சங்கரசுந்தரேசா—பர—சாம்பசிவாமந்தகாசா
எம்போலியரிதயவாசா—மன—மிரங்கியருள்சுயம்ப்ரகாசா (சம்)

கங்காதரஹரபுராரி—பர—கதிதருமங்யற்கண்ணாரி
பங்காளனேயுன்னைக்கோறி-யடி-பணிந்தேன் பொழிகருணைமாரி (சம்)

வாதவூரடிகளை வேண்டி—பரி—மாவுத்தனாகிமுன்பாண்டி
வீதியிலிருந்துணையாண்டி—நரி—விற்றசோமசுந்தராண்டி (சம்)

பாணபத்திரவடியானா—கிய—பாடகற்காகச்சஹானா
கானவர்க்கசாதாரியோனா—கியக்—கால்விறகுவிற்றமெஞ்ஞானா (சம்)

பண்ணைப்பழனிநகர்வசிக்கும்—சிறு—பக்கிரியாபிள்ளைபசிக்கும்
உண்ணத்தரும்பாரசம்ருசிக்கும்-என-உமையவளுடன்கூடிப்புசிக்கும் (சம்)

---

குறிப்பு:—பல்லவியெடுக்கும்போ தெல்லாம் சிவசம்போ என்று தொடங்குவது மிகவும் பொருத்தம் குதிரைப்பாகனுக்கும் "மாவுத்தன்" என்னும் பட்டமுண்டு.

ஷ வேறு கீர்த்தனை

இராகம் சங்காரபரணம் தாளம் ரூபகம்

(13) மதனசரமழையதனிலெனைவிட என்ற ட்ராமா வர்ன மெட்டு

பல்லவி

அருள்கருணைநறை—முகில்பொழியுமகி
லாண்டகோடி பிர்—மாண்டநாயக (அருள்)

அனுபல்லவி

இருள்கரேரென—வெழுமெனாழ்வினை
யேகமதிதிர—மாகஒருவரம் (அருள்)

சரணம்

தகிடதகஜெனு—தஜெனு தகஜெனு
ததிங்கத்தோம்-கிண—ததிங்கத்தோம்—தாம்

தகிடவெனநட—மிடுமுனதுசத
தளம்பெற்றேங்—கிய—விரிஞ்சப்பூங்—தாள்
அகமதனிலுற்—மிகவுமுயல்பழ
ஞபுரிப்பக்கிரி—யாபிள்ளைசொற்குறி

முடுகு

யாகியபதமோதி—யரியதுதி
யானனுதின—மேபுரிவேன்—நிறை
யாகமவுருவே கவலையும்விட
யாவுமெவுபாதியு மறுநிலை (அருள்)

ஷை வேறு புதுமைச்சந்தச்சிந்து

(14) இராகம் செஞ்சுருட்டி தாளம் ஏகம்

பல்லவி (குழிப்புடன்)

தந்தா—தந்தா—தந்தா—தந்தா—தனன—தனத்தந்தனதந்தா (தந்தா)
உன்பா—தந்தே—டும்பே—ரன்போ—ருறைம—துரைச்சுந்—தர—சம்போ (உன்பா)

அனுபல்லவி (குழிப்புடன்)

என்பாலிரங்கிவரம்—ஈயாததின்விவரம்

தனத்தந்-தந்தன-தனத்தந்-தந்தன-தனத்தந்-தந்தன-தனத்தந்-தந்தன
எனக்கொன்றுந்தெரி—வதற்கின்றந்தரி—தனக்குன்றின்பிரி
யநற்கந்தஞ்செறி (உன்பாத)

சரணம் ஷை (குழிப்பு)

எந்தா—யந்தோ—கொந்தே—னன்றே—இருபொருசற்றென்பது நன்றே
சிந்தாகுலந்தவிர்ப்பாய்—தீனனிதயங்குவிப்பாய்
சிறக்குஞ்செந்தமிழ்—மறைக்கண்டன்பமிழ்—துறப்பண்கொண்டுமிழ்
மருக்கெங்குங்கமழ் (உன்பாத)

வெண்டா,ழம்பூ,கண்டே,நின்ருன்,வெகுபொய்யுரைத்திங்கலகின்ருன்
*பெண்டருளும் பக்கிரியா—பிள்ளைதருஞ்சொற்பிரியா
பிறப்பொன்றுங்குறி-யறப்பண்டொந்தரி-கிடத்தொந்தொந்ததிங்
கிணத்தொந்தொஞ்சதி (உன்பாத)

*பிரமன்பெண்டு—சரஸ்வதி, அருணைப்புராணங்கொண்டு கண்டுகொள்க

ஆவணக்காப்பக
149250
சென்னை-600 008.

ஷை வேறு கீர்த்தனை

இராகம் தோடி தாளம் ரூபகம்

(15) கோபங்கொள்ளலாகுமா என்ற ட்ராமா வர்ன மெட்டு

பல்லவி

ஆடியபூம்பதமே—என்னை
யாளுந்தொன்றுண்டவ—னீளும்பொன்றுண்டவம் (ஆடி)

அனுபல்லவி

ஓடியலையுமென்—னுள்ளத்தைக்கூட்டி
யோர்நிலையாகச்செய்—தூழ்வினையோட்டி
நாடியருள்தரு—நம்பரமேட்டி
நாதன்பிணை, மெரிகாட்டி—லேதன்குண, வெறிகாட்டி (ஆடி)

அங்கயற்கண்ணம்மை—யார்மணத்தூரி
யானந்தவைபவத்தன்று—புராரி
உண்கும்பாம்பும்புலி—யும்பசியாறி
உள்ளியன்பு, வைக்கநேரில்—வெள்ளியம்பலத்திலேறி (ஆடி)

தக்கன்மகளொரு—பக்கம்வாயூறித்
தானெதுங்கவறிந்—தானந்தமீறிச்
சொக்கன்பழனிவாழ்-பக்கிரிகூறித்
துதிசெயஒரு-முறைகோறித்-தகதரிகிடவெனமாறி (ஆடி)

ஷை வேறு கீர்த்தனை

(16) சீர்சிறக்குமேனிபசேர்-பசேர்-என்ற அருணகிரிநாதர் திருப்புகழ்
வர்ன மெட்டு

தானதத்த—தான—தனா—தனா—தன
தானதத்த—தான—தனா—தனா—தன
தானதத்த—தான—தனா—தனா—தன தனதானா

ஆடிகிட்டமான—தடா—அடா—மனை
வேறுகட்டவேணு—மடா—அடா—பலி
யாடுவெட்டகாளி—தடா—அடா—கொரலு—சணிபாம

லாசை—வெட்டி—யாகு—தடா—அடா—நகை
மீது—வட்டி—யேறுதடா—அடா—கலி
யாணி—மட்டி—யேத—றிவாள்—வைவா—ளது—தெரியாதோ

மாடி—மெத்தை—யேறி—நிலா—விலா—டவ
ரோடு—நித்த—மாடு—கிருள்—வரா—ளிக
மாசு—முத்ய—மாவ—திரா—கமா—லிகை—யுணர்வாளோ

மான—மற்ற—பாவி—யுனை—லெனைப்—மிக
வேவெறுத்து—மோது—கிறு—ளெனை—மொழி
வாது—கற்ற—வேசை—யரோ—டுரு—வகை—யருள்வாயே

தேடி—வைத்த—மாநி—தியே—வியா—பக்
மேசு—வைத்த—தேன—முதே—சதா—சிவ
தேமி—குத்த—பூம—ணமே—சமா—தியி—லுறுயோகா

தீன—ரக்ஷ—காபு—னிதா—வுதா—ரமெ
ஞான—தத்து—வாத—ரதே—சிகா—விறை
சேக—ரற்கு—மாறி—முனை—லொபே—நட—மிடுவோனே

வாடி—யுற்ற—நாரை—கைலா—யமே—புகு
மாறு—முத்தி—யீயு—மாா—பரா—பர
மாத—வப்பு—ராண—நிரா—மயா—கயல்—விழிமீன

மாது—நற்ற—டாத—கையோ—டுமா—மது
ராபு—ரிப்பொ—னுல—யபீ—டமே—விய
மான—சொக்க—நாத—தயா—பரா—சுரர்—பெருமானே

## ஸ்ரீ மீனம்பிகை தோத்திரம்.

பன்னன்கு சீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

(17) பூரணி புரந்தரி நிரந்தரி துரந்தரி
புராதனி துவாதசாந்த
பூமி மதுராபுரியி ராணிமலையத்து வச
பூபதி தவத்துதித்த
காரணி கௌமாரி திரி சூலியந்தரி நீலி
கௌரி சங்கரி கபாலி

காகுத்த சோதரியுமா சோமசுந்தரக்
கடவுள் பங்கங்கயற்கண்

ஆரணி முனடி வீதியில் வலம்வந்து விளை
யாடலறு பத்துநான்கி

னதிசயங்கண்டு பொற்றாமரையி நீராடி
யரனீரணிந் தெனெஞ்சில்

வேரணியு முன்பாதமனு தினந்தெரிசிக்கும்
வேலையெற் கருள் புரிகுவாய்

மேனலாசனிமும்மை-ஞான பூஷணியுண்மை
* மீன்லோசனியம்மையே.

ஷ்டி கீர்த்தனை.

இராகம் தோடி தாளம் ரூபகம்.

(18) கோலாகலலீலைக்கின்பமே என்ற ட்ராமா வர்னமெட்டு

பல்லவி.

ஸ்ரீ மீனவி லோச னேஸ்வரி—சர்வ ஜீவதயாபரி (ஸ்ரீ)

அனுபல்லவி.

பூமீதுயர் வாழுது—மாமதுராபுரி (ஸ்ரீ)

சரணம்.

சந்தரேச-சுயம்ப்ரகாச-சொக்கநாதர்-தோள் விலாசப்
பந்தநேசப்-பாரிமு-ராரிச-கோதரி (ஸ்ரீ)

நாயினுங்கே-டாயுழைத்து-நானுழல வோஅழைத்து
நீயினுங்கே-ளாதவி-ரோதம-தேதருள் (ஸ்ரீ)

நற்கிரியை-யொன்றென்னுளும்-நல்குவாய்-பழனிவாழும்
பக்கிரிதா—சன்பத-வின்பச-ரம்புனை (ஸ்ரீ)

☞ குறிப்பு:—இப்பாட்டின் அனுபல்லவியில் பூமீதுயர் என்பதைச் சுருட்டாமல் பல்லவியைப்போல் நேரோகப் பாடினால்தான் தாளத்துக் கிசைந்துவரும், சரணத்திலும் அப்படியே;

* மீனலோசனியம்மை என்பது ஒருவருடைய சொந்தப்பொருளல்ல.

ஷை, ஷை வேறு
இராகம் இந்துஸ்தானி தோடி தாளம்-ஆதி.
(19) நடந்ததென்ன சொல்லம்மா என்ற நாடக வர்ணமெட்டு
(நாத நாமக்கிரியையிலும் பாடலாம்,)

பல்லவி.

ஆதரித்தாள்வாயே-மீனுக்ஷியம்பாள் நீயே-என்னை (ஆத)

அனுபல்லவி.

கோதறுத்த மதுரைக்—கோபுரங்காட்டி
குளிர்ந்த பொற்றுமரைக்—குளப்புனலாட்டி
நீர்தரித்த சொக்கர்—நீறமுதூட்டி
நினைப்பவர்க்கருள்தடா—தகைப்பெருமாட்டி (ஆத)

ஆடிநல் வீதியு—மணுகிடமாட்டேன்
அடியவருறவையெள்—ளளவும் பாராட்டேன்
ஓடியலேந்துபல்—லுலுத்தரைக் கேட்டேன்
உதவியில்லை யென்றுன்மே—லொருப்பழிபோட்டேன் (ஆத)

* சக்கிரி யெழுதிய—தலைவிதிபோலே
தாழினுமுயர்த்துமுன்—ருளிணைமேலே
பக்கிரியாபிள்ளை—†பதமலராலே
பணிந்தருச்சனை செய்தேன் பரிந்திதுகாலே (ஆத)

ஷை, ஷை வேறு ஓரடிப்போக்கு.
இராகம் ஆகிரி அல்லது நாடகப்பிரியை தாளம் ஏகம்.
(20) இந்தவனத்துக்கிணையேது என்ற பல்லவியெடுப்பு

பல்லவி.

நீயே-நேரில் வந்தருள்வாயே—மீன-லோ-சனி (நீயே)

அனுபல்லவி.

தாயே தலைமதுரைத்தலைராணி
சகலசாஸ்த்ர சதுர் வேதபுராணி
நாயேனுளமுறை நறுமலர்வேணி
நறவு முத்தமிழ்பேணி-விரவு நித்யகல்யாணி (நீயே)

---

* சக்கிரி—தலைவன்
† பதம்—பாவினுேருறுப்பு-பா,மாலையும்பத, மலருமாம்

சரணம்.

பாராமுகமேன்விழி–வண்டு–பரவுமுந்தன்
பாதாரவிந்த மலர்த்–தொண்டு–பண்ணுமடியார்
சீராடி மண்மிசைபு–ரண்டு–சித்தியடையும்
சேதிரானேயறிந்த–துண்டு–சிறியேன்மதி
வேருகிமிக்கபல–வூரார் நகைக்கவிலைப்-பெண்டு–வீடேகெதியாய்
வேதாவிதித்தவிதி–மீதாசுவைத்தணையு–ருண்டு–வேசையவள்வாய்
நீராதரத்திலுயர்–க்ஷீராமிர்தப்பயசி–னுண்டு–நிலைக்கவன்னுள்
நீபோவெனக்கழறி–நாய்போல்நடத்தியும்வெ–குண்டு–நீங்காதுநின்ற
பூரியனுயினு-மன்பொடுவந்தனை-கூறியுமாதிரி-யம்பகியம்பரை-விண்டு-புகழ் சோதரி
பூரணியாரணி-யந்தரி சுந்தரி-காரணி நீறணி-யும்பரமன்புடை-மண்டு-புராத னியோங்
காரிகபாலி க-டம்பவனந்திகழ்–நாரிவராகி நி-ரஞ்சனி யென்றுனி–ரண்டு– கனகமணிக்
கால்தொழுதேமன-மஞ்சிமயங்கிவி–டாதழுதேனுனதன்பரொழுந்துதி-ரண் டு-கைத்தாளமுந்தம்
‡ பூருமிர்தங்கமு-நன்குழுழங்கவி-பூதியணிந்து– பண்டு
போதகசுந்தாரும் பலரும்புகல்-பூவிலுறைந்த– கண்டு
நேர்பதமுஞ்சிவ-மந்திரமுஞ்சொலு-நேரமொடுங்கி யண்டு
நேயமனம்பெற-வுந்தினமுந்தமிழ்-நீரிலிறங்கி– மொண்டு
சேரசை சீர்தளையடிதொடை— யொண்டு
செம்பாகப்புகழ் செய்ய நி— கண்டு
காரிகையோது பக்கிரி கவி— விண்டு
கருணையுறவுங்கண்டு-தருண அவிழ்தந் கொண்டு (நீயே)

ஷை வேறு கீர்த்தனை.

இராகம் சேஞ்சுருட்டி தாளம் ஆதி.

(21) பக்தி சாதிக்கவிடாது என்ற உடுமலைக்கவி வர்னமெட்டு

பல்லவி.

தாயே மதுரை மீனுட்சி–மிகத்
தாழுமேழை நான்கடாட்சி (தாயே)

அனுபல்லவி.

சேயேனறிவற்ற-ஜெந்திலுங்கீழுற்ற
நா யேனன்றோ குற்ற-நாட்டுவதேன்பெற்ற (தாயே)

‡ தம்புரு என்பது இங்கு தம்பூரென மருவியது

சரணம்.

கற்றறிமோனைழநா-னே-யா-னேன். அதன்
காரணங்காணுமே-லே-போ-னேன்
சுத்தப்ரமமான-சொக்கரபிமான
பத்தினியேதீன-பந்து நீயே ஞானத் (தாயே)
தத்தையத்தா வென்று-கூ-த்-தா-டி-குந்தச்
சானையுந்தேடாமற்-காத்-தா-டி
உத்தியோகம் நாடி-யுண்டதல்லால்மாடி
மெத்தையுண்டாதேடி-வீணுச்சுதம்மாடி (தாயே)
ஓத்தர்முன்னும் போய்க்கன்-ஞு-பின்-ஞு-வென்று
நூதனப்பாடல்சொன்-னேன்-சின்-னுள்
அத்துறையுந்தாண்டி-யன்புச்சுடர்தூண்டி
நத்தியுனேவேண்டி-நம்பிவந்தேன்பாண்டித் (தாயே)
வெட்கங் கெட்டவேசை-வே-ரு-சை-கொண்டு
விட்டுப்பிரிந்துமவள்-பே-ரா-சை
புக்குக்குப்பென்றள்ளை-போற்செய்யுதேசள்ளை
பக்கிரியாபிள்ளை-பாட்டன் கந்தப்பிள்ளைத் (தாயே)

குறிப்பு:—அறிவானது, புருடனுகிய தனக்கடங்கி நடவாமல்வேறிடங் களுக்குச் சென்றுகொண்டிருக்கும் "மனம்" என்னும் தன் பெண் சாதிக்கு நல்லொழுக்கம் வருமாறு தாய் முன் அம்மனத்தை வேசை யென்று திட்டுவது சாலப்பொருந்தும்

அரும்பதவுரை-பேராசை = பெரியஆசை, புக்கு = புகுந்து குப்பென்று = திடீரென்று, அள்ளை = பிசாசு, பாட்டான் = பாட்டை வாசஸ்தானமாகக்கொண்டவன், கந்தப்பிள்ளை = கந்தன் என்று பெயர் கொண்டபிள்ளை.

ஷை வேறு கீர்த்தனை

இராகம்-கரகரப்ரியா-தாளம்-ரூபகம்

(22) ராமனீசமானமெவரு என்ற தியாகராஜ கிருத்திய வர்ன மெட்டு

பல்லவி

அம்மநீ கடாட்சி—மதுரை—யாட்சி—நீட்சி—மீனாட்சி (அம்)

அனுபல்லவி

பெம்மான் சுந்தரேசபிரியை
பெருமையுரியை—தருமநெறியை (அம்)

சரணம்

மலையத்துவசசுகுமாரி
மரகதவடிவலங்காரி
நிலையத்துவிதநிமலைநாரி
நினைக்கும்பக்கிரிகவிக்குதாரி (அம்)

ஷை வேறு கீர்த்தனை

இராகம்-ஷண்முகப்பிரியா-தாளம்-ஆதி

(23) மரிவேறே திக்கெவரையா என்ற வேங்கடேச கிருத்திய வர்ன மெட்டு

பல்லவி

கெதியாரெனக்—கம்மவோமீனாட்சி (கெதி)
கிருபைசெய்ஞான—உருவேமெய்யான (கெதி)

அனுபல்லவி

மதிவேணிமீது—மகிழ்பாணிமாது
விதிசேரமோது—மீனநீயல்லாது (கெதி)

சரணம்

மாபலாநல்வாழை—மடலோங்குதாழை
வாழ்சோலைசூழ்—மதுரைநாயகி
பாவலர்க்குளேழை—பக்கிரிநான்கோழை
ஆவல்வைத்துன்றனை—யண்டினேனிவ்வேளை (கெதி)

ஷை வேறு நோட்

(24) சக்கப்பப்பமகரிரீ என்ற நோட் வர்னமெட்டு

ஏகம்

வெற்புப்பொற்சுதையணியே—மீனலோசனமணியே
விர்த்திக்கானவழியருள்—விகசிதகாரணியே (வெற்)
பற்பச்சித்தியுமறியே—னற்பப்புத்தியினெறியே
பாவாடை, சோர்வாடை, பூவாடை, மேலாடு
பாவக்கணிகையர்பதமே
சேவித்தொழுகினனிதமே
பழனிப்பக், கிரிபுகலும்,
பதமணிமதுரைநகர்ரமணி (வெற்)

## ஆஞ்சநேய தோத்திரம்

### கீர்த்தனை

(25) ஆயமுசேதரதோஜி என்ற இந்துஸ்தானி வர்னமெட்டு

பல்லவி

ஆதரராகவதூதா—அனுமந்தநாதா (ஆத)

அனுபல்லவி

உயர்—வானவேதா—கம—ஞானபோதா
நல்ல—ஆதாரமீதலாகாதா (ஆத)

தொகையரு

மாதா, சீதா, மணிபிரா, ணனைவிட, மனத்தினி, நினைத்த, போழுதே
வந்தேன், வந்தேன், ராமதூ, துவனனு, மானென்று, நின்று, தொழுதே
மாதவ, னருங்கர, முறுங்கணை, யாழிதந், தடையாள, வாய்மை, யோதி
மா, லோ, கமீ, ரேனழயுங், காத்துக், கொடுத்த, சோதி

பாட்டு

மாருதிநீதா—மலைய—மாருதகிதா—பழனி
வாழும்: பக்கி, ரிக்கு, நாளும் (ஆத)

## ஸ்ரீராமபஜனமிர்தசாரம்.

### கீர்த்தனை

(26) கௌலமே சையாரேதேரே என்ற இந்துஸ்தானி வர்னமெட்டு

பல்லவி

ராமபஜனமிர்தாந்தம்—ரமணீயகாந்தம் (ராம)

அனுபல்லவி

ஆமதுபின் னேகாந்தம்—அருளுமுபசாந்தம்
அனுதிவேதாந்தம்—அனேகயுகாந்தம்
அபாய, மேயில்லாத, சாந்தம்
அழியாதபாந்தம் (ராம)

சரணம்

கௌசிகன் செய்வேள்விகாக்கும்—கல்லைப்பெண்ணாக்கும்
தவசிகள்பயந்தீர்க்கும்—தண்டகத்தையேற்கும்
தசக்ரீவனூர்க்கும்—தாண்டிப்போய்நின்றூர்க்கும்
சஞ்சீவி, சிரஞ், சீவி, சேர்க்கும்
ஜனகியை மீட்கும் (ராம)

தாரகமுராரிபாதம்—தருஞானபோதம்
கூறும்பக்கிரிகீதம்—கொண்டதனிநாதம்
கோரும்பிரசாதம்—கோபிகாவினோதம்
குணுல, யாதி, மேல, தீதம்
குளிர்நவநீதம் (ராம)

ஸ்ரீகோவிந்தநாமசங்கீர்த்தனம்

(27) அரேஜாவுரேஜாவரியா தும்பர்வாஞரே என்ற இந்துஸ்தானி வர்னமெட்டு

பல்லவி

ஹரி-கோபிகா ஸ்ரீரமணனந்தகோபாலா,நந்தகோ,பாலா-ஹரி (கோ)

அனுபல்லவி

தீபிகாஉனதுசெம்பொற்பாதம்—தேடுமேழைமுறையின் சொற்கீதம்
சேரா-தாகா-தின்கண்-டுன்பந்-தீராதா-இன்பம்-நேராதா-ஹரி (கோ)
மாயவாழ்விதிலழிம்புச்சூதும்—வாதுமேநிறையுமெந்தப் போதும்
வாரா-யோபே-ரன்பின்-றஞ்சந்-தாராயோ-கொஞ்சம்-பாராயோ-ஹரி (கோ)
பாயவாழிநெடுஞ்சேதுக்கிரியா—பக்கிரிதாச *சங்கீர்தப்பிரியா
பார் நீர்-தீவா-யண்டந்-தந்த-பௌதீகா-மந்த்ர-வைதீகா-ஹரி (கோ)

ஸ்ரீரெங்கநாதர் திருப்பள்ளி யெழுச்சி

கீர்த்தனை

(28) இராகம்-பிலகரி-தாளம்-சாப்பு

வள்ளிபாரதப்பிலகரித்தரு வர்னமெட்டு

கண்ணிகள்

இன்னந்தூக்கமோபள்ளி—யெழுந்தருள் ஸ்ரீரங்க—நாதா
நீ— முன்னம்பாரதப்போரை-முடித்த அனுபபோஜவர்தூதா (இன்)
வெள்ளிமூனாத்துவானம்—வெளுத்துவிடியறகாலம் ஆச்சே
மண்-அள்ளியுண்டடிபட்ட—அந்தயுகங்கடந்து—போச்சே (இன்)
கலிபிறந்துபல்லாண்டு—கழிந்தவிபரமறியாயோ
அக்—கிலிபிறந்தபொழுதே—கிறுங்கிப்படுத்துவிட்—டாயோ (இன்)
ஆற்றுநடுவிலேவந்—ததிகநித்திரைசெய்ய—லாமா
அக்—கூற்றுவந்திவ்வுலகைக்—கொள்ளைசெய்யுதேபரந்—தாமா (இன்)
பக்கிரியாபிள்ளை—பாடும்பிலகரிப்பண்கீதம்
சீர்- மிக்கநின்செவிகொண்டு-விழியாதிருப்பதுவி—னோதம் (இன்)

*சங்கீர்தம் = எழுத்துச்சேர்க்கை

ஷை வேறு கீர்த்தனை

(29) இராகம் சாவேரி தாளம் ஆதி

சோமனே காமனே ரெகுராமனே என்ற ட்ராமா வர்ணமெட்டு

கண்ணிகள்

எந்தனுக்கி—ரங்கிவரந்—தந்தனுக்ர—கம்புரிய
இந்தவேளை—யுந்தனுக்கு—கந்த—தல்லவா
சந்தனுமைந்—தன்வழியில்—வந்தகுந்தி—நந்தனரின்
ஐந்து துணை—கொண்டுபார—தந்தொடங்கிய—வல்லவா (எந்)

அத்துவாபரயுகத்தில்—நித்திரைகொள்—ளாமலவ
வற்றபல—காரியமு—டித்த—தனியே
இத்துயர்க்க—லியுகத்தி—லத்தனையும்—விட்டுநதி
மத்தியில்நுழைந்துசய—னித்துமெய்ம—றந்தனையே (எந்)

முன்னொருமு—றையமர—ருன்னையெழுப்—பவதுகொண்
டன்னைவயிற்—றினில்ராம—னென்ன—வுதித்த
வன்னமுகில்—வண்ணனேநற்—கண்ணனேபக்கிரிதாசன்
சொன்னயம—றிந்துசித்தக்—கண்மலர்தி—றந்துமெத்த (எந்)

## ஸ்ரீவெங்கடேச முறையீடு.

கீர்த்தனை

(30) இராகம் செஞ்சுருட்டி தாளம் ஏகம்

அள்ளியள்ளிக்குடிக்கும் என்ற நாடககீத வர்ணமெட்டு

கண்ணிகள்

எந்நேரமுமடிமை—யென்மீது—கோபமா
ஏழைநான்செய்த—பாபமா—சல்லாபமா
யிருக்கின்றவுன்ப்ர—தாபமா—நெஞ்
சேங்குவது—நீங்கமதி—யோங்கியருள்—வேங்கடனே (எந்)

அன்னைதந்தைகுருதெய்—வம்நீயே—எந்தனை
ஆட்கொள்ளவேநி—பந்தனை—பு—ரிந்தனை
யன்றேபின்னேன்ம—றந்தனை—என்
ஆண்டவனே, ப்ராண்டவர்பால்—நீண்டதயை—பூண்டவனே (எந்)

சங்கீர்தப்பக்கிரிதா—சன்கீதப்—பார்ந்தனே
தாயலர்மேலு—காந்தனே—வே—தாந்தனே
சர்வாதிகார—வேந்தனே— என்
தாழ்ந்தகவி—சாய்ந்தசெவி—யேந்திவர—நீந்திடுவாய் (எந்)

## ஸ்ரீமத் பழனியாண்டவர் தோத்திரம்

(31) கலித்துறை (யமுகம்)

திரு, வாவினன், குடிகொண்ட, துவாரகைச்சீதரனுந்
திரு, வா, வினன், குடி, யம்புலிமண்டலஞ் செய்தவனுந்
திரு, வாவி, னன்குடி, வெண்மரைமாதுடன்றேடரிய
திருவாவினன்குடிமாநகர்மேவிய சேவகனே

(32) ஷை ஷை

சேவஞ், சுமந்த, புவிவானடங்கத்தினந்தொறுமுன்
சேவஞ், சுமந்த, வடி வா லெதிர்த்த திற லவுணச்
சே, வஞ்சு, மந்த, முருகாவிசைந்துன் செழுங்கமலச்
சே, வஞ், சு, மந்த வடிமேல்விழுந்து தியங்குவனே

அந்தம் = சுபாவம்

(33) ஷை சுப்பிரமண்ய பராக்ரமம் (மனத்திருப்பு)

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம் நிரோஷ்டகயமுகம்

தினகரனைச், சந்திரனைக்கனைகடலைத்தரையதனைத்திகழிலங்கா
தி, னகரனைச், சங்கரித்தசீதரனைக்கஞ்சனைச்செய் திகலிலங்கா
தி, ன, கரனைக், கண்டறிதியக்கரத்தை யென்றறைந்ததிறனையக்கேந்
தின, கரனைக், கந்தனைநங்கலியகற்றஞ்சிலனையித்தினத்தினத்தே

ஷை கீர்த்தனை (மனத்திருப்பு)

(34) இராகம் இந்துஸ்தானி தோடி தாளம் ஏகம்

நன்னபியா-ரா-ரே என்ற இந்துஸ்தானி வர்னமெட்டில் வெளியாயிருக்கும் "அம்பிகா உன்மகன் குகன் என்ற தமிழ்க்கீர்த்தனை வர்ன மெட்டு இதற்கு இந்துஸ்தான் பல்லவி வேரே தமிழ்ப்பல்லவி வேறேயாக அமைக்கவேண்டிய அவசியம் நிதானிப்போர்க்கு நேர்த்தியாய் விளங்கும்

இந்துஸ்தான் பல்லவி

கந்தநா—ம—மோ—து—சிந்தையே—ஏன்—வாது

தமிழ்ப்பல்லவி

கந்தநா—மஞ்சொல்கொஞ்சமே—னுந்தகா—வஞ்சநெஞ்சமே (கந்)

அனுபல்லவி

பந்தபாசக்கருக்கும்—பாவவினைவேறறுக்கும்
முந்தவாவின்பெருக்கும்—மூடு—மீன்ற—பேடு—போன்ற-நங் (கந்)

ஆறுபொறியாணவித்தான்—ஐந்துபொறிதாணவித்தான்
தேறுதந்தைக்கோதுவித்தான்—தேவ—காந்த—னுவ—லோய்ந்தநங் (கந்)

வேசையதரங்கடித்தாய்—வீணருறவேபிடித்தாய்
மீசைமிகவுந்துடித்தாய்—வேல—னய்ந்த—நால—னர்ந்த-நங் (கந்)

துள்ளித்துள்ளியோடுகிறாய்—தோகையரைநாடுகிறாய்
கள்ளக்கவிபாடுகிறாய்—காம—நீங்க—நேம—மோங்க—நங் (கந்)

அக்குகன்மகிழ்ந்துநிற்கும்— அம்பழனியூரிருக்கும்
பக்கிரிதாசன்புதுக்கும்—பாடல்—பூண்ட—ஈடி—லாண்ட-வன் (கந்)

ஷை கீர்த்தனை (மனத்திருப்பு)

(35) இராகம் அடாணு தாளம் ரூபகம்

முருகன் திருமால்மருகன் என்ற தமிழ்க்கீர்த்தனை வர்னமெட்டு

பல்லவி

மனமே—ஜெகவாழ்வொருசொற்—பனமே—கெட்ட (மன)
இந்த—மட்டும்போதும்பட்ட—கஷ்டம்வீணே கெட்ட (மன)

அனுபல்லவி

கனமே—விய—தென்பழனிக்குன்றிற்
கனியொன்றுளதமுதின்சுவையினுநன்றதையினியுண்டிரு(மன)

சரணம்

ஓடியலைந்துகூத்—தாடினுயேஅதி னுண்டோஎதுஞ்சாரம்
பல— உத்தியோகங்கேடி—வித்தியானுயோசை—யோகவியாபாரம்
நாடியிருந்து நாணங்கெட்டுயர்வீரம்
நாசமாகநடந்தாயல்லாதந்நேரம்
கூடியிருந்து குமாரன் பாலாதாரம்
கொண்டாயிலை—கண்டாயினும்—விண்டாயிலை—மண்டாகிய (மன)

மூலமுளைப்பிணி—வேராறுக்கும்போக—மூலச்சித்தர்—மருந்து
கந்த—மூர்த்திதனைப்பணிந்—தாற்கிடைக்குங்கரு—முட்டிநீபோ-யருந்து
ஞாலமுழுது மொரேசிறு விருந்து
நாதனுக்காம தையேகொண்டு—திருந்து
மாலயனுக்கரியான்குரு—முருந்து
மயில்வாகன—னிருதாண்மல—ராறுகாலமு—மறவாதமர் (மன)

அக்கிரமக்கிரி—யைக்குநாமென்றுமுன்—ருடுவதுன்வேலை
நலல—அத்துவிதப்பரி—சுத்தரைக்காணி—லடைந்திடுவாய் மூலை
வெட்கமில்லாமல்விலைவேசியர்—காலை
வேண்டிப்பணிந்து கற்ருய்விரக—நூலை
பக்கிரியாபிள்ளையின்பனுவல்—மாலை
பலவேய்ந்தழ-கொளிர்காந்தனை-நினையாண்டுமெய்-பிருமாந்தபொய்(மண)

ஷை கீர்த்தனை (மன்ருட்டு)

(36) இராகம் பியாகு தாளம் அடதாளம்

ஆதாரமேதேனு நீ தருவாய் என்ற உடுமலைக்கவி வர்னமெட்டு

கண்ணிகள்

வாராயென்—னேராயு—தாரா—சதா
ஜீ—வாதார—பூதாபி—தாபூ—ஜிதா
பாராய்வி—சாராதி—தீரா—சிதா
ராய்—பாகூறு—வாய்மாது—மானேர்சுதா (வாரா)

வெம்மாய, வன்சூர, சம்மா—ரனே
கல்—வித்தான, மாம்பழ, னியூ—ரனே
அம்மானை, வள்ளிக்கி, ணக்கா—ரனே
நல்—அன்பர்க்கு, ழைக்குங்கு, ணக்கா—ரனே (வாரா)

அப்பாவ, ருட்பார்வை, நட்பா—வலா
வந்—தாள்வாய்ஜெயக்கேத, னச்சே—வலா
பொற்பார்த, மிழ்ப்போத, கப்பா—வலா
நம்—பும்பக்கி, ரிக்கோர்து, ணைக்கா—வலாய் (வாரா)

(ஷை, ஷை மன்ருட்டு)

(37) அம்பாள்மதுரைமீனுக்ஷி—என்ற உடுமலைக்கவி வர்னமெட்டு

கண்ணிகள்.

வாராய்—மாகதப—யூரா—திரு
வாழும்—பழனி—யூரா—உதாரா
வரத—ஞான—சாரா
மனதினதிகாரா—மறைவதொருசிரா (வாரா)

தாராயெனக்குனிரு—தாளே—காத்
தகுந்தநாளிந்—நாளே—அந்நாளே
தாயுமோதி—னளே
தனையன்முறை—கேளே
தனிமுருக—வேளே (வாரா)

பாலன் பக்கிரிபதம்—பாடி—திவ்ய
பதுமப்பாதந்—தேடி—வந்தாடி
பணிகின்றேனை—நாடி
பயணவழிகூடி—பரிவினினிதோடி (வாரா)

ஷை, ஷை திருப்புகழ்.

(38) இசைந்த ஏறுங்கரியுரி போர்வையும்-என்ற வர்னமெட்டு.

சந்தக்குழிப்பு.

தனந்த—தானந்—தன தன—தானன—தன தான
குரங்கு—ரூபம்—பிறவியி—நேரினு—மதநாதர்
கொளும்பி—ராயந்—தனி லுடை—யாதிய—வணிமேவி
அரங்கி—லேகின்—றிளையவர்—மா லுற—வுருமாறி
யசைந்து—தோனுங்—கணிகையர்—சார்பற—வருள்வாயே
மரங்க—ளேழுந்—துளைபட—ஏவிமு—னொருநாளில்
மறைந்து—பாணந்—தொடுநெடு—மாலரி—மருகோனே
வரங்களீயும்—படிபல—காவடி—யுறுதோளார்
வணங்கி—யாடும்—புகழ்பழ—னுபுரி—முருகோனே

ஷை, ஷை (திருப்புகழ்)

(39) மருவே செறித்த குழலார்—என்ற வர்னமெட்டு.

சந்தக்குழிப்பு.

தனன—தனத்த—தனன—தனத்த
தனன—தனத்த—தனதான.

விழியாலெதிர்த்து வருவோரை வெட்டி
விரகே கொடுத்து—நடமாடி

மிகவே சிரித்து—முலைபேசிவிற்கும்
விலைமாதரிச்சை—கெடஞான
வழியோதிசித்த—முனதேக வெற்பை
வல்மாகநிட்டை—கலையாது
வருமா றெனக்கு—நிறைவானபுத்தி
மதியோடுசித்தி—தரவேணும்
அழியாதகற்பி—னுயர்வேடுவச்சி
யதராமிர்தத்தை—யுணுவோனே
அடுசூரபத்ம—னுடலாவிரத்த
மதிலே குளித்த—வடிவேலா
பழிபாதகத்தி—னுறவாலடுத்த
பலநோய் தணிக்கு—மவிழ்தோனே
பதமோது பக்கி—ரியையாதரித்த
பழனுபுரிக்கண்—முருகோனே

ஷ, ஷ (திருப்புகழ்)

(40) சந்தக்குழிப்பு.

தனனதத்த—தனனதத்த—தானதானனு—தனனதன
தனனதத்த—தனனதத்த—தானதானனு—தனனதன
தனனதத்த—தனனதத்த—தானதானனு—தனன்தன—தனதானு

உமிழுமெச்சி—லினையுதட்டி—லூறிநாறுநீ—ரினையமிர்த
மெனவருத்தி—யணையிருத்தி—யேகபோகமா—யிருவெனுயி
ருடலுனக்கு—ளுரிமைபற்றி—யோயுமாயுநாள்—வரையிலிணை—
பிரியாமல்
ஒருகலத்த—முதுபுசித்து—நீயுநானுமா—யொருமைபெற
வெணியிருக்கு—மெனைவெறுத்தி—டேலெனுநரு—வினுமினிய
வுரைபிதற்றி—யுளவனைத்து—மோசவாழ்விலே—உதவவரு—
குறுநேசர்
தமிலொருத்த—னிடையினிற்ப—தாலனேகமா—கியவகையி
லபகரித்து—முகமறைப்பி—லாதிகாலநா—யகர்வரவு
தனையெடுத்து—நனிநிகழ்த்து—தாசிமாதர்வா—சகவுறவு—கலவாது
சகசநிட்டை—பாவுநற்ற—போதனுதியோர்—சமயமிலை

யெனிலுமற்பு-தமுயர்வெற்பி-லேறிநாளுநா-னின்தரிய
சரணதுத்தி-யமதியற்று-சாதனுதியா-வதுறவினி-விடுவாயே
சமர்முகத்தி-லொழுகிரத்த-தாரையூடுரு-முலகைவகை
தகஜெணுத்த-திமிதிமித்த-தாமெனவிடா-நடனவொலி
தரவெதிர்த்த-திறமிகுத்த-தாருகாதிசூ-ரரைவிரைவி-
லடுவோனே

தமிழ்வளர்த்த-குறுமுனிக்கி-தோபதேசசா-சனமருள்கு
ருகுபிடித்த-குகவிசித்ர-ரூபபூபனே-அழகுமிளிர்
சரதசித்ர-சிகிநடத்து-ஞானதேசிகா-தவவலிமை-யதனலே
மமதையுற்ற-மலையளித்த-மாதுமாவுமா-வனிதையொடு
மகிழ்சிவப்பி-ரபுகடுக்கை-மாலையார்சுதா-மருவுதினை
வனமதிற்ப-ரணையமைத்து-வாசமேமுனு-ளதுபுரியு-
மடமானை

மனமகிழ்ச்சி-யுறமறைத்து-வேடனாகியோர்-மாநிழலை
வரவழைத்து-மிகவிருத்த-னனவேலவா-மடமைமிகு
மழலைபக்கி-ரிகவியொப்பி-வேயுநாயகா-வளர்பழனி-
முருகோனே

ஷை, கீர்த்தனை. (முறையீடு சோபம்)

இராகம்—கமாஸ்—தாளம்—ரூபகம்.

(41) மாத்தாட பாராதேனே என்ற கன்னடப்பத வர்ண்மெட்டு.

பல்லவி.

ஆதாரம் வேறேதையா—அடிமையெனக் (காதா)

அனுபல்லவி.

கேதாரகௌரியருள்-கிஞ்சுகமணிவாயா
ஆதாரவெளிப்பர-மானந்த கார்த்திகேயா (ஆதா)
திருவாவினன்குடிவாழ்-சேயே நானேன்மையொன்றி
மருவாவினன்குடி மா-மரை நேருன்பதமன்றி (ஆதா)
நம்புமடியா ரெந்த-நாளுந் துயரப்பட்டால்
பின்புன்பெருமையென்ன-பேதை என்னைக்கை விட்டால்
(ஆதா)

உன்காது பன்னிரண்டி-லொன்றிலேனு மேன்னேலம்
நன்கேறு திருக்குமோ-ஞாயத்துக்கேதுகாலம் (ஆதா)
அந்தாதி புகழ்வண்ணத்-தருணகிரிக்கிள்ளை
பைந்தமிழணிவேலா-பக்கிரியாபிள்ளைக் (காதா)

ஷை, ஷை (முறையீடு வீரம்)

(42) கார்த்திகா நித்ய கல்யாண என்ற வர்னமெட்டு.

கண்ணிகள்

பூத்ததாமரை நேர்கூலா - புள்ளிமாமயிலூர்கோலா
போற்றினேனுமையோர்பாலா - புந்திதந்தருள்கூர்வேலா (பூத்)
கார்த்திகேயகுகாகந்தா - காந்த ஞானசிநேகந்தா
காக்ஷிநீள்பிரமானந்தா - காக்குமுன் பிரமாணந்தா (பூத்)
மின்னையேய்க்குமொரேவேலை - மேவுமுன் பணிமேல்வேலை
யென்னை யேய்த்திடுமோவேலை - யீன்றபூவிவிதேவேலை (பூத்)
யேய்க்குமே லதையேகாட்டு - இன்ப வாழ்வுடனேநாட்டு
வாய்க்குமார முதூறூட்டு - வாட்டும்பாவமெல்லாமோட்டு (பூத்)
பண்ணைசேர் பழனிக்குன்று - பாடும் பக்கிரியைக்குன்று
தெண்ணியாள் கருணைக்கன்று - வேயிதாதிவழக்கன்று (பூத்)

ஷை, ஷை (முறையீடு-இரௌத்திரம்)

இராகம் இந்துஸ்தானி தோடி தாளம்-ஏகம்.

(43) வருத்துவதழகோ சொல்வாய் என்ற ட்ராமா வர்னமெட்டு.

பல்லவி.

உனக்கிது மரியாதையர்—உள்ளதைத் தானேதையா

அனுபல்லவி.

எனக்கருள் புரியா - திருப்பது சரியா
ஏங்கி வாடுகின் - றேன் பழனிக்கிரியா (உன)
குக்குடக் கொடியா - கைக்கிடைத்தடியா
கேடிமேன் சேரக் - கொங்கா வினன்குடியா (உன)

கிள்ளை பக்கிரியா - பிள்ளைசொற் பிரியா
கிஞ்சித் தென்முறை - கேள்வள்ளி குஞ்சரியா (உன)

ஷை, ஷை (முறையீடு அற்புதம்)
இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஏகம்
(44) மலையான் பாட்டு வர்னமெட்டு.

கண்ணிகள்.

வாவாவாமயில் - வாகனக்கடவுளே
வந்துகுடி கொள்வாயென் - சிந்தனைக்கடவுள்ளே (வாவா)
தேவா பார்புகழ் - தென்பழனி வேலவா
சேயனுக்குன் றூயமலர்ச் - சேவடியின்மேலவா (வாவா)
கா கா காவென்று - கத்துகின்ற சப்தமே
காதில்நுழைந்தானுமுரு—காதோஉந்தன்சித்தமே (வாவா)
ஆகா நீ விளை - யாட்டுக் காரனல்லவா
அப்பனுனக்கங்கொரு - மாட்டுக்கார னல்லவா (வாவா)
கானக்குறத்தியிடங் - கலப்பிச்சைக்காரனே
கண்டதுண் டுன்தகப்பன் - குலப்பிச்சைக்காரனே (வாவா)
வாணிச்சி பிட்டையுண்டு - மண்சுமந்து கம்படி
வாங்கு சொக்கன்பிள்ளையென்று—வைகுதேபெரும்படி (வாவா)
கக்கினேனுள்ளதெல்லாம் - கார்த்திகையைக்கொண்டவா
பக்கிரியாபிள்ளைசொல்லும் - பாட்டுருசிகண்டவா (வாவா)

ஷை, ஷை (புகழ்)

நூதனவண்ணம்.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-சாப்பு.

(45) சந்தக்குழிப்பு.

தனனு-தன-தந்தன-தானன-தானதனந்தன, தந்தன தானன
தனனு-தன-தந்தன-தானன-தானதனந்தன, தந்தன தானன
தந்தனு-தன-தந்தனு-தன-தந்தனு-தன-தந்தனு-தன
தந்ததான-தன-தந்தனு-தன-தந்ததான-தன-தந்தனு-தன

தனனா-தன-தந்தன-தானன-தானதனந்தன,தந்தனதானன
தனனா-தன-தந்தன-தானன-தானதனந்தன,தந்தனதானன
தந்தனா-தன-தந்தனா-தன-தந்தனா-தன-தந்தனா-தன
தந்ததான-தன-தந்தனா-தன-தந்ததான-தன-தந்தனா-தன
தனனா-தன-தந்தன-தானன-தானதனந்தன,தந்தனதானன
தனனா-தன-தந்தன-தானன-தானதனந்தன,தந்தனதானன
தந்தனா-தன-தந்தனா-தன-தந்தனா-தன-தந்தனா-தன
தந்ததான-தன-தந்தனா-தன-தந்ததான-தன-தந்தனா-தன
தனனதனத்த-தனனதனத்த-தனனா.

## ஆண்கலை.

திருமா-லய-னிந்திர-னாதியர்-தேடருமெந்தைய-ரன்றிருமாறுதல்
விழிவா-யறு-மின்பொறி-யாய்வரு-மாதிபரங்கிரி-யங்குகனால்புகழ்
செந்திணா-யக-னந்திமே-கனி-றைந்தபோ-திலு-ணைந்துகோ.லந
டஞ்செய்தோகை-மயி-லொன்றிலோ-கவ-லஞ்செய்தோர்நொடியில்--
வந்தவே-ளொளிர்

திருவே-ரக-நம்பெருமா-னுபர்-சேவலனும்பர்ப-யங்கரசூருட
லிருகூ-றுப-டும்படி-கூரிய-வேலெறியுங்கும-ரன்கனிவாகிய
சிந்தையா-னொரு-தந்தமே-பெறு-தந்திசோ-தர-னிந்துவோ-டிரு
கங்கையாறு-புனை-செஞ்சடா-டவி-தொங்கிநீட-னது-தந்தைகா-திடை
தெளிவா-யருள்-விஞ்சைமு-னோதிய-தேசிகனன்பரு ளங்குடி-யானவ
னறிவூ-டுவி-ளங்கிய-பேரொளி-யாறுமுகன்கன-கந்திகழாறிரு
செங்கையா-னக-ளங்கஞா-னத-ரங்கனே-ழையர்-பங்கிலே-வள
ருந்தயாப.ரனு-வந்துதே-றலை-யுண்டுபாடு-மினவண்டுசூழ்-தரு
செழியகடப்ப-மலர்முடியக்க-மணிவான்

சிறுமோ-கம-டந்தையர்-காமுறு-சேவைபுரிந்துதி-ரிந்தவராமரு
ணகிரீ-சனை-முன்கைவி-டாதவர்-வாயிலிருந்தமு-தின்சுவையூறுக
சிந்தெனா-நிறை-சந்தவோ-சைய-மைந்தபா-சுர-வந்தனா-திகொள்
கந்தனாக-னிம-லன்பட-ரசு-கந்தசேக-ரம-ணைந்தமார்-பின
னதிபா-வநிரம்பிய-பாதக-ராபினு-நெஞ்சில-வன்பததாமரை
யுனிநா-டொறு-நின்றுப-ராவிடி-லூதியசஞ்சித-பந்தமெலாமுடி
வங்களை-புற-நன்குபே-ரருள்-பொங்கநே-ரிவி-லங்குவா-னம

லன்குலால-னைநெ-ருங்கியோ-மள-பின்கபாட-நிலை-கண்டுகூ-று தி
சிறிதே-யென-வந்தண-ணுதரி-தேயெனவொண்பிர-மன்றலைபோதிய
தரமா-னக-டுஞ்சிறை-வாழ்வுட-னேதிருமெங்கள்கு-ழந்தைவை—
வேளிறை

தெங்குமா-புனை-நுங்குசேர்-பனை-புங்குமா-துளை-கொங்குவா-ழைம
ரங்கடாவி-யகு-ரங்குபாய்-பழ-னங்கடோ-று-நடு-மங்கைமார்-முலை
திமிரநடிக்கு-மழகர்குடிக்க-ணுறைவான்

அருமா-தவ-கங்கண-கீதவி-யாபகவிங்கித-மங்களநாரத
முனிகூ-றிய-பண்புரை-போலடர்-வேள்விநெடுங்கிரி-யின்கமழ்சாரலை
யண்டிபோ-டிவெ-ருண்டமா-னைவெ-குண்டுதே-டுவில்-வண்டனு-கிவி
ளைந்தகான-கநு-ழைந்துநேர்-தினை-குந்திவாய்கொ-ளவி-ரைந்துதாழ்
—கிளி

குபில்கா-டைபு-றஞ்செலு-மாறிசை-கூவியுயர்ந்தப-ரண்டனிலேறிய
சரயா-னக-வண்கல்ப-டாதுவி-டாதெறியுங்குற-வங்கனைபாநசை
கொண்டுவா-சக-மிண்டுபே-சிம-றைந்துபூ-மர-மொன்றுதா-னென
வன்றுமாறி-நரை-புண்டுகூ-னிந-டந்துபோய-ருகி-ருந்துசா-லவு
மழகா-னப-ழங்கதை-காவிய-மாசியவிந்தைவி-ளம்பியவாவில
மடமா-துத-ருநதினை-மாவுந-றுவுமருந்திம-கிழ்ந்துவிடாய்தணி
யஞ்சிலோ-தியெ-னுஞ்சொலோ-தியி-றைஞ்சியா-னைமு-கன்சகாயம
டைந்துகாதல்-வளி-வஞ்சிமா-னைம-ணந்தசீல-ன-ல-குன்றுதோறுமெய்
அமரவருக்க-முனிவர்துதிக்க-அமர்வான்

அரசே-பரதன்பெற-நாடுத-லாநகரங்கிர-கங்குருதாதைய
ரியதா-யரி-னம்பணி-யாளர்சி-னேகர்துறந்துவ-னம்புகுநாளினி
லங்குசீ-தைய-ணங்கைவா-ரியி-லங்கையே-கிய-சிங்கரா-வண
னெஞ்சியானை-துர-கம்பகா-திர-தஞ்சகோத-ரரி-ளங்குமா-ர்பெ
ரியமூலப-லங்குல-வாழ்வுட-னீறடையும்படி-வெஞ்சரமேவிய
ரகுரா-ஜப-ரம்பரை-ராகவ-னேர்மருகன்பரை-நந்தனனீதிவி
ரிந்தகா-ரண-னெந்தவே-ளையு-நொந்தபேர்-மன-தின்பிரா-தைய
றிந்துபேணி-வரு-கின்றகா-வல-னிந்தியாமு-மூவ-துஞ்சுதே-சிய
அபிமா-னந-லம்புக-நாடறி-வாளரகங்களி-பொங்கிடவாதர
மதுகூர்-வர-தன்பெரு-வானை-ளாவியதண்கமு-கின்கிளைபாளையி

லந்தர்வா ளையெ ழுந்துபாய் வய லுந்தடா கமு மண்டுசோ லையு
மஞ்சுலாவு தொடர் குன்றுமே விய கொங்குசார்ப ழனி மந்தாலய
மதிலுறுசித்த னமுதில்ருசித்த முருகோன்.

☞ குறிப்பு:—பெண்கலையை யிரண்டாம்பாகத்திற் காணலாம் (அது நற்றாயிரங்கற்றுறையாகும்.)

அறுபடைக்கந்தவேள் வணக்கம்.

கீர்த்தனை.

(46) தேவா சம்போசிவா என்ற மெட்டு.

ஆனால்

அதற்குரிய இந்துஸ்தானி வர்ணமெட்டை ஒத்துப்பார்க்கவேண்டாம்.

பல்லவி.

காத்தாள்-கந்தா-குகா-கந்தக்-கும்பத்-தங்கற்-குந்தைக்-கந்தே-சிகா
பூத்தாள்-தந்தா-ளையா-புண்பட்-டென்சித்-தந்தட்-டுஞ்சத்-தங்கே-ளையா

அனுபல்லவி.

கஞ்சனைச்சிறையிலிட்ட—காரணக்கடவுள் நீயே
எஞ்சலில்பழனிசெந்தி—லேரகங்குன்றுகள்வாயே
மஞ்சடர்தென்பரங்குன்ற—மாலழகர் சோலைச்சேயே
மாசிலாமணியே உனை
யேசதாபணிவேன் மனை
யாசைமேலிடாமல் வினை
வாசமேயிலாம லெனைக் (காத்)

சரணம்.

கேட்டால் நெஞ்சா டியே கெஞ்சிக் கெஞ்சிக் கும்பிட்டுன்பட்—
சந்தே டியே
பாட்டா யிங்கோ தினேன் பந்தப் பெண்சிற் றின்பத் தின்பித்—
துங்கோ தினேன்
கிண்டிமாவுந்தேனும்வள்ளிக்—கிள்ளைதரவுண்டவாயா
வண்டுவிழிக்குஞ்சரிநன்—மாதரசிமகிழ்நேயா
பண்டிதமுறும்பழனிப்—பக்கிரிதாச சகாயா

பாலனிலைநீதெரிந்து
சாலவொளிர்வேலணிந்து
கோலமாதரோடெழுந்து
நீலமயிலேறிவந்து (காத்)

திருவாவினன்குடியல்லாத மற்ற ஐந்து படை வீடுகளுக்கும்
தனிப்பாடற்றிரட்டு

## (திருப்பரங்குன்றம்)

கீர்த்தனை (சந்தப்போங்கு)

(47) இராகம்-காம்போதி-தாளம்-ஆதி.

பல்லவி.

திருப்பரங்கிரி—யிருப்புறுங்குமரா—விர-திகள்-தவ-மிக-வளர் (திரு)

அனுபல்லவி.

கருப்பநிலையதி — லுருப்படியுநெறி
விருப்பமறமதி — திருப்பியருள்புரி (திரு)

சரணம்.

தனத்தனந்தன—தனத்தனந்தன
தனத்தனந்தன—தனதான

வெனத்தகும்பல—வினித்தசந்தமெ
லிசைப்பதங்களி—னபிமான
புனத்திலொளிர்கவ—ணசைத்தமலைநிகர்
தனத்தியொருசிறு—குறத்திமணநுகர்
மனத்திநகையெழ—விருத்தமொழிபகர்
தினத்துமுனைவர—வழைத்தகுகபுகர் (திரு)
சிரித்துமுன்புர—மெரித்தசங்கர
சிவப்பரஞ்சுடர்—நுதல்வாழ்வே
நெரித்தடர்ந்தலர்—முடித்தபைங்குழல்
நிலைத்தகுஞ்சரி—மகிழ்கோவே
விரித்தசபைதனி—நிறுத்தியுடுதுகில்
பிரித்தபொழுதடி—துதித்த திரௌபதை

குறித்தபடியதை—வளர்த்து வெகுபுகழ்
தரித்தமுரகரி—தனக்குமருகநல் (திரு)
நடிக்கமஞ்சினை—யெதிர்க்குமஞ்சிகி
நடத்திமண்டல—வலமீறுய்
முடிக்குமுன்கண—பதிக்கரும்பழ
முதற்பரன்றர—வுளமாறுய்
மடிக்கணுனையுமை—யணைத்துவிழியது
துடைத்துவருசின—மகற்றிவிளைகனி
கிடைக்குமிடமென—வனுப்புமொருபடை
புடைப்பழனிவளர்—சுபக்கிரிபரவு (திரு)

## திருச்சீரலைவாய் (திருச்செந்தூர்)

## கீர்த்தனை.

இராகம்-நாட்டைக்குறிஞ்சி-தாளம்-ஆதி.

(48) என்ன ஒயிலாக நிற்கிருள என்ற ட்ராமா வர்னமெட்டு.

### பல்லவி.

செந்தில் வடிவேல் முருகையா—திருமா-துறுமா-புரமான (செந்)

### அனுபல்லவி.

வந்திலகு புகழ்விரி - வாயருணகிரிபாடும்
சிந்திலகு விதுபரி - செய்யண்ணுமலைதேடும் (செந்)

### சரணம்.

கூற்றுப்படை போல்வந்து—குடைந்த பூதத்தாலுழன்ற
கோலநக்கீரர்பணிந்து—கோறியக் கொடுமைகுன்ற
ஆற்றுப்படை யோதியபின்—னன்பருள் புரிந்துநின்ற
ஆறுமுகனேபடைவீ—டாறிலு மொளிர்கின்ற (செந்)

வானவர் பணிந்துசூரர்—வாதனையையன் றுசொல்ல
வாய்திறந்தஞ்சே லென்றுநல்—வாசகம் விளம்பிவல்ல
தானவர் குலத்துரும்பு—தானு மேயில்லாது கொல்ல
தங்கவேலையே வுங்கந்த—சாமித் தேவனே நல்ல (செந்)

நின்றிரு நாமசங்கீத—நித்தலும் புகலவிருள்
நீங்கியறிவுயர் ஞான—நிலையிலமர்ந்து பொருள்
வென்றியடையவுதவி—விரும்பிமனப்புன்மருள்
விலகக்கம்பலைக்கண்ணீர்விடும்பக்கிரிக்கருள் (செந்)

## திருவேரகம் கீர்த்தனை.

(49) நாச்சகாரு என்ற இந்துஸ்தானி வர்னமெட்டு.

பல்லவி.

கந்த - சாமி - கந்த - சாமி - பூமி
காரகனே - எந்த - னேரகனே - சொந்த
ஏரகனே - கந்த (சாமி)

அனுபல்லவி.

எந்தநாளுந்துயரே தருகின்ற
பந்தபாசம்பலமாகவுழன்ற
மைந்தனையாதரி மாயைவென்ற (கந்த)

சரணம்.

நாரி - மைந்தா - நாரி - மைந்தா - இந்த-
நாளில் - வந்துபாரி - வாழ்வுதந்து - நேரி
லாள்விரைந்து - நாரி (மைந்தா)

சூர சம்மாரா சுப்பைய விசாகா
கோறும் வள்ளி தெய்வகுஞ்சரிமோகா
தாறுமாறுமாகாதைய - நீகா (கந்த)

தக்க - தொக்க - தக்க - தொக்க - திக்க
தா - மெனவாடக்க - னேர்முகிலாடக்கொண்
மாமயிலாய் - தக்க (தொக்க)

நெக்குருகப்பழனிப்பதி வாழும்
பக்கிரி - யாபிள்ளை - சொற்பதநாளும்
மிக்க வேதம்பேரை - மேவியாளும் (கந்த)

## குன்றுதோருடல்

கீர்த்தனை.

இராகம்-இந்துஸ்தான் தோடி-தாளம்-ஏகம்

(50) சலோ-கோனியாண்டே மார்க்கசலோபையா என்ற
இந்துஸ்தானி வர்னமெட்டு-

பல்லவி.

கதிர்-வடிவேலா நீயென் முன்னேவாராய்
நான்-வாடலாமோகூறாய்- கதிர் (வடி)

அனுபல்லவி.

வடி 'வான குன்று தொறும்-வாசஞ்செய்வோனே
புன்-னுசங்கொய்வோனே-கதிர் (வடி)

வள்ளிதெய்வானையுடன்-மாமயிலூர்ந்து
இன்-னேமகிழ்கூர்ந்து-கதிர் (வடி)

உள்ளக்கவலையெல்லா-மோதுகின்றேனே
நான்-மோதுகின்றேனே-கதிர் (வடி)

ஏர்கொண்டபாதமெனக்கீந்திட நாடி
நெஞ்-சார்ந்துறவாடி-கதிர் (வடி)

பேர்கொண்ட பக்கிரியா-பிள்ளைசொற்கீதா
என்-சொல்லுரைக்காதா-கதிர் (வடி)

## பழமுதிர்சோலை.

காவடிச்சிந்து.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஏகம்.

(51) வண்ணத்தினமாவைத் தெள்ளியே-என்ற அண்ணாமலை
ரெட்டியார் காவடிச்சிந்து வர்னமெட்டு.

கந்தா இதென்ன சிங்-காரமா-மனங்
கல்லா இரும்பாக — ரேமா-என்னைக்
காப்பதுனக்கொரு-பாரமா-சுடு

கதிராதவ—னுமையாதொரு—புறமூர்பழ—முதிர்சோலைமு
‡ காமிங்கிருந்ததி—தாரமா—கலி
காலத்துக்கஞ்சுதல்—வீரமா (கந்)

காலனைத்தள்ளிய—பாதமே—கொண்ட
கர்த்தன்விழிப்பிர—சாதமே—இந்தக்
காலனுக்கஞ்சல் வி—னோதமே—உறு
கதிவேறினி—யெதுதா னுள—தையாகிலு—மூடிவாயுரை
கண்டித்தேனென்றப—வாதமே—கொள்ளக்
காட்டுகிறாயிவ்வ—னீதமே (கந்)

பாரினுருமாறி—மாமனே—என்னைப்
பாசாங்கு செய்கின்ற—பூமனே—கள்ளப்
பாகையழகர்நன்—னுமனே—அறு
படைவீடுக—ளினுமேவுயர்—பழனுபுரி—தனில்வாழ்சிறு
பக்கிரிகிதச்செந்—தாமனே—கடைப்
பார்வையெனக்கருள்—நேமனே (கந்)
‡ முகம்—முகாமென மருவியது

## முருகன்பேரில் ஓர் இங்கிலீஷ் பாட்டு.

தாரதில்லாரே திலபருகே என்ற இந்துஸ்தான் வர்னமெட்டு.

(52) பல்லவி.

O Muruga Come-on the Peacock
Why do you hide on the-high hilly rock

அனுபல்லவி.

Am I not your Honour's-humble poor Servant
I Represent
My requirment
O Muruga come (O)

(தோகையரு.)

Is there any one to help me in this world
Is it not your bounden duty to show guide

149250

Yes Yes I know that you are Lad but Child
Kiss and embrace me without being fail

(பாடல்.)

This is an application–of Pakkiri Dhasan
Your own son
Cover grand sin
O Muruga come (O)

149250

ஷை தமிழெழுத்தில்.

பல்லவி.

ஓ முருகா கம்–ஆன் தி பீகாக்
ஒய் டு யு ஹைடான் தி-ஹை ஹில்லி ராக்

அனுபல்லவி.

ஆமை நாட் யுவர் ஹானரஸ்–ஹம்பிள் பூவர் செர்வண்ட்
ஐ ரிப்ரசெண்ட்
மை ரிக்குயொர்மெண்ட்
ஓ முருகா கம் (ஓ)

(தொகையறு.)

இஸ் தேர் யெனி யொண் டு ஹெல்ப்மி இன் திஸ் வொரல்ட்
இஸ்ஸிற் நாட் யூவர் பௌண்டன் டூட்டி டு ஷோ கைட்
எஸ் எஸ் ஐ நோதட்யு ஆர் லாட் பட் சைஷல்ட்
கிஸ்ஸண் யெம்ரேஸ் மி வித்தவுட் பீயிங் பெயில்

(பாடல்.)

திஸ்ஸிஸ்ஸான் அப்ளிகேஷன் ஆப்பக்கிரிதாசன்
யுவர் ஒன் சன்
கவர் கிராண்ட் சின்
ஓ முருகா கம் (ஓ)

## மங்களம்.

(53) இராகம்-ஆரபி-தாளம்-ஆதி.

அம்பிகையே என்ற தமிழ் கீர்த்தனை வர்ணமெட்டு.

பல்லவி.

மங்களமே—ஜெய (மங்)

கய—மாமுகனுக்குஞ்சுய—நாமகளுக்கும் ஜெய (மங்)

அனுபல்லவி.

கங்கைதங்கிய திருக்—கடப்பவனத்து முக்கட்
கரும்புக்கும் மீனக்கட்—சுரும்புக்குமேமிக்க (மங்)

சரணம்.

பத்திநாயன்மாரறு—பத்துமூவருக்கும்
பதஞ்சலிவ்யாக்ரம—பாதசீவருக்கும்
புத்திவாதவூரர்க்கும்—பூசைத்தேவருக்கும்
பொருந்தியமூவருக்கும்—அருந்தவர்யாவருக்கும் (மங்)
கண்ணனுக்கு மஞ்சனை—கான்முளையான
கனவனுமானுக்கும்—கதிதருஞான
அண்ணல் முருகனுக்கு—மவனபிமான
அரிவையர்க்குஞ்சமான—அடியவர்க்குமமான (மங்)
பக்கிரியாபிள்ளை—பவவினைமாறும்
படிபுனை கீர்த்தனப்—பாமாலை கூறும்
மக்களனைவருக்கும்—வயதொரு நூறும்
வளர்ந்துசகலபேறும்—விளங்கிடவே நாடோறும் (மங்)

சுபம்! சுபம்!! சுபம்!!!

முற்றிற்று.

## பரியாயம்.

"தமிழ்" என்ற பதத்துக்கு ,,இனிமை" என்பது பொருளாய் நிற்பதோடு "ழ்"; என்னும் தனி யெழுத்தையுடையது என்றுயாவரும் ஒப்புக்கொள்ளத்தக்க ஒரு உண்மைப்பொருளும் தெளிவாய் விளங்குகிறது. உலகத்திலுள்ள பன்னூறு பாஷைகளிலொன்றிலேனும் "ழ்" என்னும் மெய்தோன்றியதில்லை யென்பது நிச்சயம்; ஆங்கிலம்போன்ற சிலபாஷைகளில் சமஸ்கிருதம், தெலுங்கு முதலிய பாஷைகளிலிருக்கும் "ள்" என்னும் மெய்கூட அமைக்கப்படவில்லை; ஆனால் "ல்" என்னும் மெய்யானது பொதுவாக சகல பாஷைகளுக்கும் உரித்தாயிருக்கிறதென்று சொல்லலாம்.

இதனால் நமது தமிழுக்கும் மற்ற பாஷைகளுக்குமுள்ள வித்தியாசம் இத்தன்மைத் தென்பதை யிலகுவில் யாவரும் தெரிந்துகொள்ளக்கூடும்; அவ்வாறிருக்க, ழகர. ளகர, லகர வித்தியாசங்களைக்கூடத் தெரிந்துகொள்ளாமல் தமிழில கவிசெய்யத் துணிந்தால், அதனால் தமிழ்ப்பாஷை யென்னும் பெயராவது, பிரதமத்திற்காட்டிய இனிமையென்னும் பொருளாவது அதற்குண்டாகுமா? ஒருக்காலுமுண்டாகமாட்டாது.

குட்டுதற்குப்பிள்ளைப்பாண்டியனேனவில்லைகுரும்பியளவாய்க்
கரதைக்—குடைந்து தோண்டி
யெட்டினமட்டறுப்பதற்கோவில்லியில்லையிரண்டொன்
றுய்முடிந்ததலை—யிறங்கப்போட்டு
வெட்டுதற்குங்கவியொட்டக்கூத்தனில்லைவிளையாட்டாய்க்
கவிதைதனை—விரைந்துபாடிற்
றெட்டுதற்கோ அறிவில்லாத்துரைகளுண்டுதேசமெங்கும்
புலவரெனத்—திரியலாமே

என்று ஒருவர் பாடிவைத்திருக்கும் கவியை இங்கு ஞாபகப்படுத்துவது மிகவும் பொருத்தமென்பது என்னுடைய அபிப்பிராயம்

தமிழையாதரிக்கும் உண்மைச்சங்கங்கள் பலவிருந்து அவைகளின் வாயிலாகத் தமிழ்நூற்கள் யாவும் பிரசுரிக்கப்படவேண்டுமென்று வரையறுத்துவிட்டால் மேற்காட்டிய குறைபாடறுத்துவிடலாம் அப்படிப்பட்டகாலம் ஒன்று சமீபத்தில் தோன்றுமென்பதைக் காட்டுவதற்காகவே இக்குறைகள் கூத்தாடுகின்றன என்று நிச்சயமாய்ச்சொல்லுகிறேன்

எவ்வித நிபந்தனையுமில்லாமல மனமபோனவாறு பக்திமேலீட்டால் சொல்லப்பட்ட சில தெலுங்கு கிருத்தியங்களையும் தற்போதுலவிவரும் சில தமிழ்க் கீர்த்தனைகளையும் ஏககாலத்தில் கேட்கும் ஒரு தெலுங்கு பாஷாபிமானியானவர் "தெலுகுதேட்டம் அரவம் அத்துவானம்" என்று ஒரு பழமொழியிருப்பதாகத் தெலுங்கைச் சிலாகித்தும் தமிழைக் கனிஷ்டித்தும் பேசுகிறார்; அத்துவானம் என்றால் பிரயோஜனமற்றதென்பதே அவருடைய கருத்து; வாஸ்தவத்தில் அத்துவானம் என்பதற்குச் செவ்வானம் என்றும் பாழ்ங்காடு என்றும் இரண்டே அருத்தங்கள் தமிழிலுண்டு; ஆகாயத்தைப் போல் விரிந்த செந்தமிழ் என்றும் கடம்பவனமாகிய காட்டினிடமாக முளைத்த ஸ்ரீ சொக்கலிங்கப்பெருமானிடத்துத் தோன்றிய தமிழ் அல்லது சகல பாஷைகளும் சகல ஜீவஜெந்துக்களும் உண்டாவதற்கு முன் பாழ்ங்காடாயிருந்த உலகத்திற்றோன்றிய தமிழ் என்றும் நாம் அவைகளுக்குச்சரியான பொருள்கொண்டாலும் அத்துவானம் என்று சொன்னவருடைய கருத்தையல்லவா! இப்போது கவனிக்கவேண்டியதாயிருக்கிறது; ஒருவனைப்பார்த்தால் வாசிப்பில்லாத முட்டாள் என்று பொருள்தோன்றும்படி "படியாதவன்" என்று சொல்லிவிட்டுப்பின்னால் படி = ஒப்பு, ஆதவன் = சூரியன் ஆகசூரியனுக்குச்சமமானவன் என்று புகழ்ந்து பேசினால் உண்மையில் படியாதவனாயிருந்தால் தான் சந்தோஷமடைவான்; அதுபோல் அத்துவானம் என்று கருத்து வேறாகச்சொன்னவர் விஷயமாக நாம் எவ்வளவுதூரம் க்ஷாத்திரப்படவேண்டியவர்களாயிருக்கிறோமென்பதை இதனை வாசிக்கும் புத்திமான்களே அளவுபடுத்தலாம்; ஆனால் எய்தவனிருக்க அம்பைநோவதில் யாதுபிரயோஜனம் அவரை அப்படிச்சொல்லும்படியாகத் தூண்டியது என் போன்ற சிலருடைய தமிழ்க்-கீர்த்தனைகளல்லவா? அவைகளைக்கொண்டு நாம் பிறரைக்கோபித்துக்கொள்ளுவதும் தவறேயாகும்.

தமிழ் வேதங்களாகிய தேவாரம், திருவாசகம், நாலாயிரப்பிரபந்த முதலியவைகளும் அருணகிரிநாதரால் திருவாய் மலர்ந்தருளப்பட்ட திருப்புகழ் வண்ணமுதலியவைகளும் தமிழ்ச் சக்கரவர்த்தியாய் விளங்கிய பழனிமாம்பழக்கவிராயரவர்களா லியற்றப்பெற்ற கீதாமிர்தசார முதலியவைகளும் இன்னும் பல பெரியவர்களாற் செய்யப்பட்ட தோத்திரப்பாமாலைகளும் தற்காலத்தில் நாடகக்காரர்களால் வெளியாகும் பல வர்னமெட்டுகளுக்கு ஒத்துவரவில்லையே என்ற கவலையைத்தவிர வேறுவிதத்தில் ஒருவரும் வேண்டா வெறுப்பாக அவைகளைவிட்டுவிடவில்லை யென்று நினைக்கிறேன்; ஏனென்றால் அவைகளை உண்மையாகவே வெறுத்தால் காலம் இன்னும் விபரீதமாகும்.

எவைகளையும் தற்கால வர்னமெட்டில் பாடமுடியாதென்று சொல்வது அறியாமையே! திருஷ்டாந்தமாக ஒன்று சொல்லுகிறேன் "வீடலால வாயிலாய்" என்னும் திருவாலவாய்த் தேவாரப்பண்ணை நாடகத்தில் வழங்கிவரும் "தாஜ ராஜ தாஜ ராஜ அட்டலாஜஹோ" என்னும் ஒருகோணல்மாணலான இந்துஸ்தான் வர்னமெட்டில் பாடிப்பாருங்கள் அதுவருமாறு:—

பல்லவி

வீட, லால, வாயி, லாய்வி,—ழு, மி, யோர், கணின்

அனுபல்லவி

கழல்-பாஆட, லாஆல, வாஆயி, லாஆய்ப-ர, வ, நின்றபண்பனே (வீ)

சரணம்

காடலாலவா—யிலாய்கபாலி—நீள்கடிம்மதில்
கூடலாலவா—யிலாய்குலாய—தென்ன, கொள்கையே
காடலால, வாயிலாய்க, பாலிநீள்க, டிம்மதில், கூடலால, வாயிலாய்கு, [லாயதென்,
கூடலாலவா—யிலாய்குலாய—தென்ன, கொள்கையே
என்ன, கொள்கையே-என்ன, கொள்கையே கொள்கையே (வீ)

இந்தப்பாடலை இங்கிலீஷ் நோட்டில் பாடிப்பாருங்கள் அதுவருமாறு:—

தான, தான, தான, தான, தான, தான, நன்னன
வீட, லால, வாயி, லாய்வி, ழுமி, யோர்க, ணின்கழல்

இப்படியே மற்ற அடிகளையும் பாடலாம் திரிபுடை தாளத்தில் பாடவேணுமா? ஆனந்தபைரவி, காம்போதி, நாதநாமக்கிரியை முதலிய வேறு எந்த ராகங்களிலும் பாடவேணுமா? தாராளமாகப்பாடலாம்; இசைக்காகச் சொற்களைச் சுருட்டியும், குறைத்தும், கூட்டியும், பாடவேண்டியதில்லை உங்களுக்குச் சந்தேகமிருந்தால் இப்போது வழங்கிவரும் "நன்னபியாரரே" என்ற இந்துஸ்தான் வர்ன மெட்டில் இந்துஸ்தான் பல்லவியைபபோல் இதே பண்ணைப்பாடிப் பாருங்கள் அதுவருமாறு:—

பல்லவி

வீடலா—ல—வா—யி—லாய்விழு—மி—யோர்—கள் (வீ)

அனுபல்லவி

நின்கழல், பாட, லால—வாயிலாய், பரவ, நின்ற
பண்பனே, காட, லால—வாயி, லாய்க, பாவி, நீள்கடிம்
மதில்கூட, லால, வாயி—லாய்குலா, யதென்னகொள்
மதில்கூட,லாலவாயி,—லாய்கு,லாய,தென்ன,கொ-ள்கை,யே(வீ)

இப்படி யெத்தனையோ பாடல்கள், நம்முடைய இஷ்டங்களுக்கெல்லாம் கட்டுப்படக்கூடிய அத்தனையிலகுவில் நம்முன்னோர்களால் பாடிவைக்கப்பட்டிருக்கின்றன

மேலும் கடவுளின்மேல் கீர்த்தனம்பாடுவதற்கு பக்தியும், பயமும்வேண்டும்; அவைகளிருந்தாலும் ஒருவாறு தமிழ் லக்ஷணமறியாமைக்கு மன்னிப்பு நேரிடக்கூடும் அதற்கும் ழகர, ளகர, லகர, ணகர, நகர, னகர, ரகர, றகர, வித்தியாசங்கள் தோன்றுதிருந்தால் என்ன பெருமை? இதற்கு அத்தாக்ஷிபாகக் கொஞ்சகாலங்களுக்கு முன்னிருந்த வைஷ்ணவசாம்பிரதாயிகளான சிலதாசர்களுடைய தமிழ்க் கீர்த்தனைகள் வெளியாயிருக்கின்றன அவைகளில் பக்தி நிரம்பியிருப்பதை நாம் கண் கூடாகக்காணலாம்; அந்தபயம், பக்தி என்னும் இரண்டில் ஒன்று கூட இல்லாத நானும் மற்ற சிலரும் தெய்வவழி பாட்டுக் கீர்த்தனைகள் பாடத்துணிந்தது வயிற்றுப் பிழைப்புக்காக என்று தான் கொள்ளவேண்டும்; இல்லாவிடில்

வேறெதற்காக? வென்பதை நீங்களே சொல்லுங்கள்; என்னுடைய முதல்காப்புச் செய்யுளொன்றே என் சிறுமையைத்தெளிவாய் விளக்கும்.

கல்யாணத்துக்குப் பொருள் வேண்டியமூததருமிக்கு ஸ்ரீசோமசுந்தரக்கடவுள் செய்து கொடுத்ததாகச்சொல்லப்பட்ட கீழ்க்கண்ட பாடலுக்கும் பொருட்குற்றமிருப்பதாகச்சொன்ன நக்கீரரிருந்த சங்கம் பிறந்த மதுரையில் எங்களை ஏன் என்று கேட்க ஒருவரும் முன் வராமற்போய்விட்டது காரணமாகவே நாங்கள் தைரியமாய் விளையாடுகிறோம்—எந்த அரங்கில் இந்தச் சோற்றுக்கவியை யேற்றிச்சாற்றுக்கவி கேட்போம்; நாங்களே ஒருவருக்கொருவர் திருப்பித் திருப்பிக் கொடுத்துக்கொண்டாலுண்டு.

ஸ்ரீசோமசுந்தரக்கடவுள் அருளிச்செய்த

## பாடல்

கொங்குதேர் வாழ்க்கை—யஞ்சிறைத்தும்பி
காமஞ்செப்பாது—கண்டதுமொழிமோ
பயிலியதுகெழீ இயநட்பின்
மயிலியற்செறிியெயிற்—றரிவைகூந்தலின்
நறியவுமுளவோநீ—யறியும்பூவே

இது நிற்க என்னால் எழுதப்பட்டிருக்கும் "கல்யாணவாசக கமல சௌந்தரம்" என்னும் இரண்டு பாகங்களடங்கிய ஓர் இனிய துப்பறியும் தமிழ் நாவல் கூடிய சீக்கிரம் வெளியாகப்போகிறபடியால் யாவரும் அதன் பிரவேசத்தை யெதிர்பார்த்திருப்பார்களென்று நம்புகிறேன்; அதன் சிறப்பை நானே எழுதுவதில் யாதுபயன்? பலரும் எடுத்துக்கூறுவார்களென்றே இம்மட்டில் நிறுத்துகிறேன்.

இங்ஙனம்,

**P. K. பக்கிரியாபிள்ளை பழனி.**

சென்னை-600 ...

ஷம்ஸியா பிரஸ், மதுரை—19

உ

# ரிஜிஸ்டர் அறிவிப்பு.

"பீ-தாம்பதுபங்கஜ" என்ற இந்துஸ்தானி
வர்னமெட்டு.

பல்லவி

இத்—தோத்திரக்கீர்த்தனப்பாமாலை

அனுபல்லவி

சொந்தம் வேலுச்சாமிக்கிப்பூமேலே—இத்— (தோ)

சரணம்

ஆத்திரங்கொண்டெவராயினுமிதைவே—
றச்சிடலாகாது—இதைவே—றச்சிடலாகாது
பாத்தியமாகரிஜிஸ்டர் செய்திருக்கும்—
பலன்விட்டுப்போகாது—தெய்வத் (தோ)

காருண்யமார்சென்னைக்கவர்ண்மெண்டுச்சட்டக்—
காவலுண்டதனாலே-சட்டக்—காவலுண்டதனாலே
ஆருமேயீறுரெனிலுஞ்சொன்னேனெல்—லாருஞ்
சொல்வதுபோலே—நல்ல (தோ)

கோலமிகுபழனிக்ஷேத்திரக்கணிதங்—
குப்பமுத்துப்பிள்ளை—கணிதங்—குப்பமுத்துப்பிள்ளை
பாலன்சப்மாஜிஸ்திரேட்டெட்குமஸ்தா—
பக்கிரியாபிள்ளை—சொன்ன (தோ)

இங்ஙனம்,

**K. பக்கிரியாபிள்ளை பழனி.**

6A
2-128